Corrigendum to Notice of the 31st Annual General Meeting of Virinchi Limited ('the Company') had issued Notice dated 20th August, 2020 (AGM Notice) for convening the 31st Annual General Meeting ("AGM") of the shareholders, scheduled to be held on Monday, 28th September, 2020, at 12.30 P.M (IST) through video conferencing (VC) or Other Audio Visual Means (OAVM). The AGM Notice has already been circulated to all the Shareholders of the Company in due compliance with the provisions of the Companies Act, 2013 and read with the Rules made thereunder. Subsequent to the circulation of the AGM Notice and after applying for the BSE in-principle approval,for the proposed preferential allotment of convertible equity warrants and equity shares,on 24th September, 2020, the BSE Ltd issued following observations and suggested the following changes in the Notice and explanatory statement.
1. The "Relevant date" mentioned in the Resolution # 4, 5 and in the explanatory statement for Resolution #4, 5 should be read as 28th August, 2020 instead of 29th August, 2020
2. Details of ultimate beneficiaries with respect to the Minor allottees as mentioned in the Resolution # 4, 5 and in the explanatory statement for Resolution #4, 5 should be read as given in below table:

Sl.No	Name of Proposed Alottee	Ultimate Beneficiary Name
1	Ms. Lopa Mudra Kompella D/o Viswanath Kompella Age:18 yrs	Self
2	Master. Ramakrishna Paramahamsa Kompella S/O Viswanath Kompella Age:15 yrs	Self
3	Ms. Modini Kompella D/o Viswanath Kompella Age:13 yrs	Self

3. The percentage of pre and post preferential issued capital that may be held by proposed allottees as mentioned in the Explanatory Statement for the Resolution #5

Sl. No.	Name of proposed allotee	Pre preferential Holding	% of Pre preferential share capital	Proposed Issue of Equity Shares	Post Preferential Share capital considering allotment of proposed equity shares (i.e 15,00,000)	% of Post preferential share capital considering Conversion of pending warrants, proposed warrants and allotment of proposed equity shares**
1	Ms. Madhavi Latha Kompella	11,37,300	3.48	2,00,000	3.91	4.83
2	Ms.Lopa Mudra Kompella	1,410,625	4.31	2,00,000	4.71	5.29
3	Master Ramakrishna Paramhamsa Kompella	1,570,625	4.80	2,00,000	5.17	5.71
4	Ms. Modini Kompella	1,410,625	4.31	2,00,000	4.71	5.29
5	M/s. P.K.I Solutions Private Limited	635605	1.94	7,00,000	3.90	6.93

% of Post Issue holding -Assuming full conversion of 8,00,000 warrants allotted on 21st May, 2019 and the proposed issue of warrants of 30,00,000 at Resolution No. 4 and the proposed 15,00,000 equity shares at Resolution# 5 of the 31st AGM Notice dated 20th August, 2020.
This corrigendum to the AGM Notice shall form integral part of Notice dated 20th August, 2020 circulated to the shareholders of the Company. Accordingly, all the concerned Shareholders, Stock Exchanges, Depositories, Registrar and Share Transfer Agents, Agencies appointed for E-Voting, other Authorities, Regulators and all other concerned persons are requested to take note of the above corrections. This corrigendum will be available on the Website of the Company, www.virinchi.com besides being communicated to BSE where the shares of the Company are listed.

By order of the Board of Directors
For **Virinchi Limited**
Sd/- **K.Ravindranath Tagore**
Company Secretary
M.No. A18894

Date: 26.09.2020
Place: Hyderabad

HAP — HATSUN AGRO PRODUCT LIMITED

CIN: L15499TN1986PLC012747

Regd. Office: Domaine, Door No.1/20A, Rajiv Gandhi Salai (OMR), Karapakkam, Chennai - 600 097.
Tel: 091-044-24501622 | Fax: 091-044-24501422 | Email: secretarial@hap.in Website: www.hap.in

RESULT OF 35TH ANNUAL GENERAL MEETING

It is hereby notified to the Shareholders of the Company and all other concerned entities / authorities that the Company conducted the voting through electronic means for the 35th Annual General Meeting (AGM) pursuant to provisions of Section 108 and 109 of the Companies Act, 2013 read with Companies (Management and Administration) Rules, 2014, as amended for passing of resolutions as set out in the notice of the AGM.

The voting rights of members was in proportion to their share of paid up equity share capital of the company as on the cut-off date i.e. 17th September, 2020 and as per Register of members of the Company.

The Company had appointed Shri. N. Ramanathan, Partner of M/s. S. Dhanapal & Associates, Practising Company Secretaries as scrutinizer for conducting the voting in a fair and transparent manner.

Shri. Shri. N. Ramanathan has submitted his report dated 25th September, 2020 to the Chairman of the Company. Based on the scrutinizer report, the results were declared by the authorized person Mr. G. Somasundaram, Company Secretary of the Company on 25th September, 2020 at 2:00 PM at the Registered Office of the Company at Domaine, Door No.1/20A, Rajiv Gandhi Salai (OMR), Karapakkam, Chennai 600 097.

The summarized results of the 35th AGM are as follows:

Resolution	Type of Equity share	Remote e-voting (electronic) and e-voting at the AGM
Ordinary Resolution No.1 To receive, consider and adopt the financial statements of the Company for the year ended 31st March, 2020, including the audited Balance Sheet as at 31st March, 2020, the Statement of Profit and Loss and Cash Flow Statement for the year ended on that date and the reports of the Board of Directors and the Auditors thereon	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358792
	Votes Cast against	93
Ordinary Resolution No.2 To ratify and confirm the payment of Two interim dividends made on the fully paid up and partly paid up Equity Shares of the Company for the financial year 2019-20.	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358792
	Votes Cast against	93
Ordinary Resolution No.3 To appoint a Director in the place of Shri. R.G. Chandramogan (DIN 00012389) who retires by rotation and being eligible, offers himself for re-appointment.	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358762
	Votes Cast against	123
Ordinary Resolution No.4 To appoint a Director in the place of Shri P. Vaidyanathan (DIN 00029503) who retires by rotation and being eligible, offers himself for re-appointment.	Net valid votes cast	139358885
	Votes cast in favour	138800331
	Votes Cast against	558554
Ordinary Resolution No.5 Ratification of Remuneration of Cost Auditors.	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358772
	Votes Cast against	113
Ordinary Resolution No.6 Approval for revision in the Remuneration of Mr. R.G. Chandramogan (DIN: 00012389) Managing Director of the Company	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358772
	Votes Cast against	113
Ordinary Resolution No.7 Approval for revision in the Remuneration of Mr. C. Sathyan (DIN: 00012439) Executive Director of the Company	Net valid votes cast	139358885
	Votes cast in favour	139358772
	Votes Cast against	113

Accordingly, all the above mentioned ordinary resolutions had been passed by the shareholders with requisite majority.

for **HATSUN AGRO PRODUCT LIMITED**
Sd/-
G Somasundaram
Company Secretary

Place : Chennai
Date : 26-September-2020

தமிழகத்தில் யூரியா தட்டுப்பாடு இல்லை: செல்லூர் ராஜூ பேட்டி

மதுரை செப். 27–

தமிழகத்தில் யூரியா உர தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று மதுரை மாநகர் மாவட்ட அண்ணா தி.மு.க. செயலாளரும், கூட்டுறவுத்துறை அமைச்சருமான செல்லூர் ராஜூ கூறினார்.

கள்ளந்திரி பெரியாறு பாசன பகுதியில் ஒருபோக பாசன நிலங்களுக்கு இன்று மாவட்ட கலெக்டர் வினய் தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் செல்லூர் ராஜூ தண்ணீர் திறந்து விட்டார். இந்நிகழ்ச்சிக்கு பிறகு அமைச்சர் செல்லூர் ராஜூ நிருபர்களிடம் கூறியதாவது :–

2020–21–ம் ஆண்டிற்கான வைகை அணையில் இருந்து பெரியார் பாசன பகுதியில் ஒரு போக பாசனத்திற்கு சுமார் 1,05,002 ஏக்கர் நிலங்களுக்கு 1130 கன அடி வீதம் தண்ணீர் இன்று முதல் 120 நாட்கள் திறக்கப்பட்டுள்ளது. ஒரு போக விவசாயிகள் தண்ணீரை சிக்கனமான முறையில் விவசாயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நடமாடும் நியாவிலைகடைகள் தொடங்கப்படும். சிலைகளை பாதுகாப்பதில் இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. சிலை அவமதிப்பு செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தமிழகத்தில் யூரியா தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமைச்சர் செல்லூர் ராஜூ கூறினார்.

வாடகை பாக்கி தகராறு: வீட்டு உரிமையாளர் மனைவி கொலை

சென்னை , செப்.27 –

வீட்டு வாடகைப் பாக்கி மற்றும் கொடுக்கல் வாங்கல் தகராறில் வீட்டு உரிமையாளரின் மனைவி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார்.

சென்னை சூளைமேடு ராதாகிருஷ்ணன் நகரில் குடியிருப்பவர் சந்திரமோகன் (வயது 40). அவர் மனைவி சுகன்யா (வயது 33). இவர்கள் மகன் சதீஷ் (வயது 15). இவர்களுடைய வீட்டின் ஒருபகுதியில் வாடகைக்குக் குடியிருப்பவர் நாராயணன் (வயது 55). இவர் பெயிண்டராக வேலை செய்துவருகிறார். இவர் வீட்டு உரிமையாளர் சந்திரமோகனிடம் ரூ.80 ஆயிரம் கடன் வாங்கியிருந்தாராம். அதோடு 5 மாத வீட்டு வாடகையையும் நாராயணன் பாக்கி வைத்திருந்தாராம். இதை சந்திர மோகன் கேட்டு வந்தார்.

இதைத் தொடர்ந்து சந்திரமோகன் குடும்பத்தினருக்கும் நாராயணனுக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு அது பெரிய கைகலப்பாக மாறியது. அப்போது நாராயணன் தான் வைத்திருந்த கத்தியால் குத்தியதில் சந்திரமோகன் காயமடைந்தார். உடனே நாராயணன் தான் வைத்திருந்த கட்டையால் சந்திரமோகனை தாக்கியுள்ளார். இதைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் மாறி மாறி அடித்துக் கொண்டனர்.

சந்திரமோகனின் மனைவி சுகன்யா, மகன் சதீஷுடன் கணவனைக் காப்பாற்ற முயற்சி செய்துள்ளார். அப்போது நாராயணன் சுகன்யா, சதீஷ் ஆகியோரை கத்தியால் குத்தியதாக கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து அவர்கள் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வழியில் சுகன்யா இறந்தார். காயமடைந்த சந்திரமோகன், அவரது மகன் சதீஷ், நாராயணன் ஆகிய 3 பேரும் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சூளைமேடு போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார்கள்.

குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தில் திட்ட மேலாளர் பதவி: அக்.9–ந் தேதிக்குள் விண்ணப்பம்

சென்னை, செப்.26–

சமூகப் பாதுகாப்புத்துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கத்தில் தொகுப்பூதியம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் திட்ட மேலாளர் பணியிடம் நிரப்பப்பட உள்ளது.

அதற்கான கல்வி தகுதி, அனுபவம், வயது வரம்பு, மற்றும் விண்ணப்பிப்பதற்கான உரிய விண்ணப்ப படிவம் ஆகியவற்றை http://www.tn.gov.in/job_opportunity என்ற அதிகாரப்பூர்வ இணைய தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

இந்த பதவிக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் உரிய படிவத்தில் 9.10.2020 மாலை 5.30 மணிக்குள் சமூக பாதுகாப்புத் துறை, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, கெல்லீஸ், சென்னை (தொலைபேசி: 04426421358) என்ற முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பின்வரும் விண்ணப்பங்களும் மற்றும முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் தகவலின்றி நிராகரிக்கப்படும்.

இத்தகவலை மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பொன்விழாவையொட்டி

கட்டுரை தொகுப்பு வெளியிட அக்டோபர் 15–ந் தேதிக்குள் கட்டுரை அனுப்பலாம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வேண்டுகோள்

சென்னை, செப்.27–

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பொன்விழாவையொட்டி கட்டுரை தொகுப்பு வெளியிட, உலகத் தமிழர்கள் அக்டோபர் 15–ந் தேதிக்குள் கட்டுரைகளை அனுப்பலாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறப்பட்ருப்பதாவது:–

''தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் 1968–ம் ஆண்டில் நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது பேரறிஞர் அண்ணாவின் முயற்சியால் பிரெஞ்சு மொழிக்கென்று உயராய்வு நிறுவனம் செயல்படுவதைப் போன்று தமிழுக்கென்று ஓர் உயராய்வு நிறுவனம் சென்னையில் தொடங்கப்பெறவேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக 1970–ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இந்நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்ததை சிறப்பிக்கும் வகையில் 1997–ம் ஆண்டு வெள்ளி விழாவைக் கொண்டாடிய அவ்வமயம் வெள்ளி விழா நினைவுகளை என்றும் நினைவில் கொள்ளும் வகையில் கவிதைகள், கட்டுரைகள் அடங்கிய வெள்ளிவிழா மலரை வெளியிட்டுள்ளது. இன்று 50–ம் ஆண்டான பொன்விழா ஆண்டில் (1970–2020) அடியெடுத்து வைத்துள்ளது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

எடப்பாடி சாதனைகள்

புரட்சித் தலைவி அம்மாவின் ஆட்சியில் நடைபெற்ற பல்வேறு தமிழ் வளர்ச்சிப் பணிகளுள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கென தனிக்கவனம் செலுத்தி அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்றார். இதன்காரணமாக நிறுவனத்தில் தமிழர்களின் சிறப்பினை அயல்நாட்டினரும், பிற மொழியினரும் அறிந்து கொள்ளும் வகையில் பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம், திருக்குறளின் பெருமையினை எழுத்து வடிவத்தோடு ஓவியத்தின் வாயிலாகவும் எடுத்துக்கூறும் திருக்குறள் ஓவியக் காட்சிக் கூடம்,

பிற மொழியாளர்கள் தமிழை கற்க நவீன உட்கட்டமைப்புகளோடு கூடிய மொழிப்பயிற்சிக் கூடம், தமிழர்களின் அறிவுக் கருவூலங்களை சுமந்து நிற்கும் ஓலைச்சுவடிகளை பாதுகாப்பதற்கான ஓலைச்சுவடிகள் பாதுகாப்பு மையம், உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் உலகத் தமிழர் பண்பாடு, வரவேற்பு மற்றும் தகவல் மையம், தொல்காப்பியரின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றும் தொல்காப்பியர் ஆய்விருக்கை ஆகியன ஏற்படுத்தப்பட்டது.

தொடர்ந்து புரட்சித்தலைவி அம்மாவின் உன்னத நெறியில் அம்மாவின் அரசை வழி நடத்தி வரும் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ஆய்வு மாணவ, மாணவியர் விடுதி கட்டடம், புதிய நூலகக் கட்டடம், நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய நூலகம், நூலகத்தில் உள்ள நூல்களை மின் எண்மம் செய்ய நிதியுதவி, முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு உதவித்தொகை,

முதுகலை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை, சுவடியியல் பட்டய மாணவர்களுக்கு ஊக்கத்தொகை, புரட்சித்தலைவர் பெயரில் 1 கோடி ரூபாய் வைப்புத்தொகையில் சமூகவியல், கலை மேம்பாட்டு ஆய்விருக்கை தொடக்கம், ஆண்டுதோறும் காட்சிக்கூடங்கள் பராமரிப்பிற்கான நிதியுதவி, ஆண்டுதோறும் தேசிய, பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்த நிதியுதவி,

கட்டுரைகளுக்கு வரவேற்பு

அறிஞர் அண்ணா கருத்தரங்கக் கூடத்திற்கான உள்கட்டமைப்பு பணிகளுக்கு நிதியுதவி, ஆண்டுதோறும் திருக்குறள் ஓவியப் போட்டி நடத்திப் பரிசுகள் வழங்குதல், தமிழ்த்தாய் ஊடக அரங்கில் காட்சிப்படுத்த குறும்படம் தயாரிக்க நிதியுதவி, தமிழாய்வு மாணவர்கள் பரிமாற்றத்திட்டத்திற்கு நிதியுதவி, தமிழாய்வு வலைதளத்தில் ஆய்வேடுகளைப் பதிவேற்றம் செய்ய நிதியுதவி, ஆண்டுதோறும் சுவடிகள் திரட்ட நிதியுதவி ஆகியன அளித்து நிறுவனத்தினை மேம்படுத்தி வருகிறார்கள். இத்துனை சிறப்புகளுடன் தனது ஆய்வுப் பணிகளை ஆக்கப்பணிகளாக்கி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தனது வெற்றிப் பாதையில் பயணித்து வருகிறது.

வெள்ளிவிழாவைக் கடந்து இன்று பொன்விழாவைக் கண்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பொன்விழாவை சிறப்பிக்கும் வகையில் பொன்விழா கட்டுரைத் தொகுப்பினை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக கட்டுரைகள் உலகத் தமிழர்களிடையே வரவேற்கப்படுகின்றன.

★ மொழி, இனம், மருத்துவம் தொன்மம், தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழ் வரலாறு என பன்முக ஆய்வுத் தளங்களிலும் இக்கால இலக்கியங்கள் பொருண்மைகளிலும் அமையலாம்.

★ கட்டுரை தமிழிலும் அல்லது ஆங்கிலத்திலும் எழுதப்படலாம்.

★ தமிழில் அமையும் கட்டுரை ஒருங்குறி (Unicode) எழுத்துருவிலும். ஆங்கிலக் கட்டுரை ஏரியல் (Arial) எழுத்துருவிலும் அமைதல் வேண்டும்.

★ கட்டுரை ஏ4 அளவில் 10 பக்கங்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

அக்.15–ந் தேதிக்குள்

★ கட்டுரை நிறுவனத்திற்கு வந்து சேரவேண்டிய இறுதி நாள் 15.10.2020 வியாழக்கிழமை மாலை 5.30 மணி வரை

★ கட்டுரை iitsgj@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பெற வேண்டும்.

★ தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் நிறுவனம் வெளியிடும் பொன்விழா ஆண்டில் ''உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்'' என்ற சிறப்பு கட்டுரைத் தொகுப்பில் இடம்பெறும்.

★ மேலும், விவரங்களுக்கு இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை, தொலைபேசி 04422542992, 22542781 தொடர்புக் கொள்ளலாம்.

எனவே, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பொன்விழா ஆண்டினை (1970–2020) சிறப்பிக்கும் வகையில் வெளியிடப்படவுள்ள சிறப்பு கட்டுரைத் தொகுப்பிற்கு தமிழறிஞர்கள் மற்றும் தமிழாய்வாளர்களிட மிருந்து கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

இத்தகவலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி லாலாஏரி நியாயவிலைக் கடையிலிருந்து அம்மா நகரம் நியாயவிலைக்கடை வாகனத்தை தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நிலோபர்கபில் கொடியசைத்து துவங்கி வைத்து முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். மாவட்ட கலெக்டர் ம.ப சிவனருள், மாவட்ட வழங்கல் அலுவலர் அதியமான் கவியரசு, துணைப்பதிவாளர் முரளிராஜி, ஆலங்காயம் மேற்கு ஒன்றி செயலாளர் செந்தில்குமார், வாணியம்பாடி நகர செயலாளர் சதாசிவம், மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் போஷான் அபியான் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி: கலெக்டர் மகேஸ்வரி தகவல்

திருவள்ளூர், செப். 27–

திருவள்ளூர் மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் சார்பாக, போஷான் அபியான் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றது என்று கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் மகளிர் (ம) குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் சமூகநலத் துறையின் கீழ் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் போஷான் அபியான் திட்டத்தில் போஷான் மா 2020 நிகழ்ச்சி மாவட்டத்தில் செப்டம்பர் மாதம் தேசிய ஊட்டச்சத்து மாதமாக 1760 அங்கன்வாடி மையங்களிலும், 1497 அங்கன்வாடி பணியாளர் மூலம் பயனாளிகளான வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், 05 வயது குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டம் எல்லாபுரம், கும்மிடிப்பூண்டி, கடம்பத்தூர், மீஞ்சூர், பள்ளிப்பட்டு, பூந்தமல்லி, பூண்டி, ஆர். கே.பேட்டை, சோழவரம், திருத்தணி, திருவாலங்காடு, திருவள்ளூர் மற்றும் வில்லிவாக்கம் ஆகிய 13 வட்டாரங்களிலும் 320 ஊட்டச்சத்து விழிப்புணர்வு பேரணிகள், 1760 அங்கன்வாடி மையங்களில் உறுதி மொழி, பள்ளிப்பட்டு, சோழவரம், எல்லாபுரம் (ம) திருவாலங்காடு ஆகிய வட்டாரங்களில் ஊட்டச்சத்து விழிப்புணர்வு பதாகைகள் ஏந்திய மனித சங்கிலி, 95 ரங்கோலி, 1760 அங்கன்வாடி மையங்களுக்கு விதைகள் (ம) செடிகள் வழங்கப்பட்டது. அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் எடை எடுத்தல் விழிப்புணர்வு நடைபெற்றது.

மேலும், அனைத்து வட்டாரங்களிலும் பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்ப்பிப்போம் என்ற தலைப்பில் நிகழ்ச்சி (ம) மிகவும் உடல் மெலிந்த 125 குழந்தைகளுக்கு எல்லாபுரம், கடம்பத்தூர், ஆர் கே பேட்டை, திருவாலங்காடு மற்றும் வில்லிவாக்கம் ஆகிய வட்டாரங்களிலும் மருத்துவ முகாம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மூலம் அங்கன்வாடி மையங்களில் குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களால் நடத்தப்பட்டது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் முகையூர் மத்திய ஒன்றிய சார்பில் சென்னகுணம் மற்றும் ஆற்காடு ஆகிய பகுதிகளில் இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை ஆலோசனை கூட்டத்தில் கள்ளக்குறிச்சி மாவட்ட கழக செயலாளர் இரா. குமரகுரு எம்.எல்.ஏ. பாசறை நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் இளங்கோவன், மாவட்ட பேரவை செயலாளர் ஞானவேல், மாவட்ட பாசறை செயலாளர் ராகேஷ், பேரவை துணை செயலாளர் சுபாஷ், மாவட்ட இணை செயலாளர் சரசு ரங்கநாதன், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் சீனிவாசன், ஒன்றிய செயலாளர்களான சேகர், சந்தோஷ், ரவி, நாதன் காடுவெட்டி கிளை செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட ஐ.டி.விங் பொருளாளர் செந்தில்குமார், கூட்டுறவு சங்க தலைவர் சீனிவாசன், மாவட்ட பிரதிநிதி மோகன்ராஜ், ஆறுமுகம், சங்கர் ஆகியோர் உடன் உள்ளனர்.

விழுப்புரத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம்: கலெக்டர் அண்ணாதுரை தலைமையில் நடந்தது

விழுப்புரம், செப்.27

விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் கலெக்டர் அண்ணாதுரை தலைமையில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த 5 மாதங்களாக விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெறாமல் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் குறைகேட்பு கூட்டம் நடத்த அரசு அனுமதியளித்ததன் பேரில் 5 மாதங்களுக்கு பிறகு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் அண்ணாதுரை தலைமை தாங்கி பேசுகையில், விழுப்புரம் மாவட்டத்திற்குட்பட்ட கழுவேலி ஏரியை சீர்செய்து தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொள்ள முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார்.

அதன் மூலம் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்தவும், விவசாய நிலங்களுக்கு தேவையான நீர் ஆதாரத்தை பெருக்கிடும் நோக்கிலும் கழுவேலி ஏரியில் கடல்நீர் உட்புகாத வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மேலும் விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான வீடூர் அணை தூர்வாரும் பணியும் நடைபெற உள்ளது என்றார்.

கூட்டத்தில் கூடுதல் கலெக்டர் ஸ்ரேயா பி.சிங், வேளாண் இணை இயக்குனர் ராஜசேகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) பெரியசாமி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பிரபாகரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (நீர்வள ஆதாரம்) ஜவஹர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி ஸ்ரீதேவி கலைக் கல்லூரியில் காரனோடை லயன்ஸ் கிளப் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ரெயில்வே ஐ.ஜி.வனிதா சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் லட்சுமிபதி, செயலர் ரமேஷ், பொன்னேரி டி.எஸ்.பி கல்பனாதத், அரிமா சங்க மாவட்ட இரண்டாம் நிலை ஆளுநர் ரவீந்திரன், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் நரசிம்ம ராவ், அரிமா சங்க நிர்வாகிகள், சிலம்பாட்ட பயிற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

HATSUN

ஹட்சன் அக்ரோ புராடக்ட் லிமிடெட்

CIN: L15499TN1986PLC012747

பதிவு அலுவலகம் : “டொமைன்“, கதவு எண்.1/20ஏ, ராஜீவ் காந்தி சாலை (OMR), காரப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600 097.

Phone No.: 04424501622, Fax: 04424501422 | Email: secretarial@hap.in | Website: www.hap.in

35வது வருடாந்திர பொதுக் கூட்ட முடிவுகள்

கம்பெனிகள் சட்டம் 2013 விதிகள் பிரிவு 108 மற்றும் 109 மற்றும் திருத்தப்பட்ட கம்பெனிகள் விதிகள் (நிர்வாகம் மற்றும் மேலாண்மை) விதிகள் 2014ன் கீழ், வருடாந்திர பொதுக் கூட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக 35வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் (AGM) மின்னணு வழிமுறைகள் மூலம் கம்பெனி வாக்களிப்பை நடத்தியது தொடர்பாக கம்பெனியின் பங்குதாரர்கள் மற்றும் பிற சம்பந்தப்பட்ட அனைத்து கம்பெனிகளுக்கும்/ ஆணையங்களுக்கும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது கட் ஆப் தேதியான 17 செப்டம்பர், 2020 அன்று மற்றும் கம்பெனியின் உறுப்பினர்கள் பதிவேட்டின்படி, கம்பெனியின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தில் சம பங்குகளை அவர்கள் வைத்திருக்கும் விகிதத்தின் அடிப்படையில் இருந்தது.

வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் வாக்களிப்பை நடத்த ஆராய்வாளராக திரு. என். ராமநாதன், பங்குதாரர், மெசர்ஸ் எஸ். தனபால் அன்ட் அசோசியேட்ஸ், பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள் அவர்களை கம்பெனி நியமித்திருந்தது.

திரு. என். ராமநாதன், 25 செப்டம்பர், 2020 அன்று தனது அறிக்கையை கம்பெனி தலைவரிடம் சமர்ப்பித்தார். ஆராய்வாளரின் அறிக்கையின் அடிப்படையில், இந்த முடிவுகளை கம்பெனியின் அங்கீகரிக்கப்பட்ட நபர் திரு. ஜி. சோமசுந்தரம், கம்பெனி செயலாளர், கம்பெனியின் பதிவு அலுவலகம், ''டொமைன்'', கதவு எண்.1/20ஏ, ராஜீவ் காந்தி சாலை (ஓஎம்ஆர்), காரப்பாக்கம், சென்னை 600 097ல் 25 செப்டம்பர், 2020 அன்று மதியம் 2.00 மணிக்கு அறிவித்தார்.

35வது வருடாந்திர பொதுக் கூட்டத்தின் சுருக்கமான முடிவுகள் பின்வருமாறு:

தீர்மானம்	சம பங்கு வகை	தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு (மின்னணு) மற்றும் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு
சாதாரண தீர்மானம் 1 31 மார்ச், 2020க்கான இருப்பு நிலை குறிப்பு, அந்த தேதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான லாபம் மற்றும் நஷ்டம் மற்றும் பணப்புழக்க அறிக்கை மற்றும் இயக்குநர்கள் குழு மற்றும் தணிக்கையாளர்களின் அறிக்கைகள் உள்ளிட்ட 31 மார்ச், 2020ல் முடிந்த ஆண்டிற்கான கம்பெனிகள் நிதிநிலை அறிக்கை ஆகியவற்றை பெற்று, பரிசீலித்து ஏற்றுக் கொள்ளுதல்	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358792
	எதிரான வாக்குகள்	93
சாதாரண தீர்மானம் 2 2019-20 நிதியாண்டிற்கான கம்பெனியின் முழுமையாக செலுத்தப்பட்ட மற்றும் பகுதியாக செலுத்தப்பட்ட சம பங்குகளுக்கு 2 இடைக்கால ஈவுத்தொகை வழங்குவதை ஒப்புதல் அளித்து உறுதிப்படுத்துதல்	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358792
	எதிரான வாக்குகள்	93
சாதாரண தீர்மானம் 3 திரு. ஆர்.ஜி. சந்திரமோகன் (DIN 00012389) அவர்களை இயக்குனராக நியமிக்க, சுழற்சி முறையில் ஓய்வு பெறும் அவர், மீண்டும் தன்னை நியமிக்க முன்மொழிகிறார்.	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358762
	எதிரான வாக்குகள்	123
சாதாரண தீர்மானம் 4 திரு. பி. வைத்தியநாதன் (DIN 00029503) அவர்களை இயக்குனராக நியமிக்க, சுழற்சி முறையில் ஓய்வு பெறும் அவர், மீண்டும் தன்னை நியமிக்க முன்மொழிகிறார்.	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	138800331
	எதிரான வாக்குகள்	558554
சாதாரண தீர்மானம் 5 தணிக்கையாளர்களின் ஊதியத்தை உறுதிப்படுத்துதல்	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358772
	எதிரான வாக்குகள்	113
சாதாரண தீர்மானம் 6 கம்பெனியின் நிர்வாக இயக்குனரான திரு. ஆர்.ஜி. சந்திரமோகன் (DIN 00012389) அவர்களின் ஊதிய திருத்த ஒப்புதல்	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358772
	எதிரான வாக்குகள்	113
சாதாரண தீர்மானம் 7 கம்பெனியின் செயல் இயக்குனரான திரு. சி. சத்யன் (DIN: 00012439) அவர்களின் ஊதிய திருத்த ஒப்புதல்	நிகர செல்லுபடியான வாக்குகள்	139358885
	ஆதரவான வாக்குகள்	139358772
	எதிரான வாக்குகள்	113

அதன்படி, மேற்கூறிய அனைத்து சாதாரண தீர்மானங்களும் பங்குதாரர்களால் தேவையான பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டன.

ஹட்சன் அக்ரோ புராடக்ட் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
சோமசுந்தரம்
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : 26 செப்டம்பர், 2020